**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண். 93/2018**

2019-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26-ஆம் நாள் வெள்ளிக்கிழமை வா.சா.1 (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.S.நசீர், மூன்றாம் நிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சீதா | ஜாதி | : |
| த/பெ | : | | சமயம் | : |
| கிராமம் | : | | வயது | : |
| வட்டம் | : | | தொழில் | : |

---

வா.சா.1-ன் முதல் விசாரணை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 10.06.1972ம் தேதியில் என் மாமனாருக்கு 3ம் பிரதிவாதி நிர்வாகம் கொடுத்த குத்தகை சீட்டுகள் அசல் வா.சா.ஆ1. தாவா சொத்திற்கான அ பதிவேட்டு நகல் வா.சா.ஆ2. தாவா சொத்திற்கு என்னுடைய மாமனார் செலுத்திய குத்தகை ரசீதுகள் எண்ணிக்கை - 3 அசல் வா.சா.ஆ3. தாவா சொத்திற்கு என் கணவர் செலுத்திய குத்தகை ரசீதுகள் எண்ணிக்கை - 5 அசல் வா.சா.ஆ4. தாவா சொத்திற்கு நான் செலுத்திய குத்தகை ரசீதுகள் எண்ணிக்கை - 8 அசல் வா.சா.ஆ-5. 24.03.2018ம் தேதியில் நான் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் செலுத்திய புகார் மனு நகல் வா.சா.ஆ6. தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஒப்பம்/- திரு.எம்.பரமசிவம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.